இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

வத்திகான் பதிப்பகம், திருத்தந்தை பதினான்காம் லியோ எழுதிய "ஆயுதங்களற்ற அமைதி: சமாதானம் என்பது இறைவனின் கொடை" (Disarmed and Disarming: Peace Is a Gift) என்ற புதிய நூலை வெளியிட்டுள்ளது.

## குடும்பம், பொதுநிலையினர் மற்றும் துறவர வாழ்வுக்கான ஆயர் பேரவையின் பிராந்திய ஆணையத்தின் (ERCFLL) 12-வது ஆண்டு கூட்டறிக்கை

மலேசியா, சிங்கப்பூர், புருணை ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கத்தோலிக்க ஆயர் பேரவையின், குடும்பம், பொதுநிலையினர் மற்றும் துறவர வாழ்வுக்கான பிராந்திய ஆணையத்தின் (ERCFLL) 12-வது ஆண்டு மாநாடு சரவாக் மாநிலத்தில் உள்ள மிரி திருத்தலத்தின் புனித பிரான்சிஸ் மையத்தில் 2026 ஜூன் 22 முதல் 25 வரை நடைபெற்றது. பேராயர் மேதகு ஜான் வாங் (His Grace Archbishop John Wong) அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த மூன்று நாள் மாநாட்டில் 33 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முதல் நாள் திருப்பலியை நிறைவேற்றி, இந்த மாநாட்டை மிரி மாமறைமாவட்ட பேராயர் பேரருள் ரிச்சர்ட் எங் (His Excellency Bishop Richard Ng) அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டில் குடும்ப வாழ்க்கையை பாதிக்கும் பல முக்கியப் விடயங்கள் விவாதிக்கப்பட்டன. இதில் சிங்கப்பூர் போன்ற வளர்ந்த நாட்டின் சிக்கல்களும், மலேசியாவின் சிக்கல்களும் வெவ்வேறாக இருந்தன. மலேசியாவிற்குள்ளேயே தீபகற்ப மலேசியா மற்றும் சபா, சரவாக் பகுதிகளுக்கு இடையே கூட சிக்கல்கள் மாறுபட்டிருந்தன. இருப்பினும், சிங்கப்பூர் இப்போது சந்திக்கும் சவால்களை நோக்கி மலேசியாவும் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

**விவாதிக்கப்பட்ட முக்கிய சவால்கள்:**

1. **இடப்பெயர்வும் திருமணச் சிக்கல்களும்:** போர்னியோ தீவிலிருந்து சபா மற்றும் சரவாக் பகுதிகளுக்குப் பிற நாட்டினர் புலம் பெயர்ந்து வருவதால், கத்தோலிக்க விசுவாச வாழ்விலும் திருமண உறவுகளிலும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. பலர் திருமணம் செய்ய விரும்பினாலும், திருஅவை விதிகளின்படி சில தடைகள் (impediments) இருப்பதால், தேவாலயத்தில் திருமணம் செய்வது கடினமாக உள்ளது.
2. **பிற மத வழக்கங்களும் இஸ்லாமியப் பின்னணியும்:** ஒருவர் இஸ்லாமிய மதத்திலிருந்து விலகி, கத்தோலிக்கக் கிறிஸ்தவராக வாழ விரும்பும் போது சவால்கள் அதிகமாகின்றன. மேலும், மாற்று மதத் திருமணங்கள் (Inter-faith marriage) மற்றும் பலதார மணம் (ஒரு மனிதனுக்கு இரண்டு அல்லது மூன்று மனைவிகள் இருக்கும் பழங்குடி வழிச் சடங்குத் திருமணங்கள்) போன்ற சவால்களும் உள்ளன. இவர்களில் சிலர் கத்தோலிக்கராக மாற விரும்பினாலும், இந்தச் சூழ்நிலைகளால் அவர்களுக்குத் திருமுழுக்கு (Baptism) வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. புருணை நாட்டில் இதற்கான சட்டவிதிகள் மிகவும் தெளிவாக உள்ளன.
3. **திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்தல் (Cohabitation):** இன்றைய சூழலில், திருமணம் செய்து கொள்ளாமல் ஆணும் பெண்ணும் ஒன்றாக வாழும் பழக்கம் (Cohabitation) அதிகரித்து வருகிறது. இதனை சிங்கப்பூர், தீபகற்ப மலேசியா மற்றும் சபா, சரவாக்கில் உள்ள பல கத்தோலிக்கப் பெற்றோர்களும், பங்குகளும் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருப்பது கவலைக்குரியதாக உள்ளது. சபா/சரவாக்கில் இதற்குப் பின்னணியில் இருக்கும் காரணங்கள் வேறு; ஆனால் பெரிய நகரங்களிலும் சிங்கப்பூரிலும் இது பொருளாதாரக் காரணங்களுக்காக அல்லது திருமணம் என்ற பிணைப்பு இல்லாமல் சும்மா இணைந்து வாழ்வதற்காகவே தேர்ந்தெடுக்கப்படுகிறது.
4. **பெற்றோரின் வளர்ப்பு முறையும் பிள்ளைகளின் மனநலமும்:** இன்றைய பொருளாதாரச் சூழலில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகள் தங்களை யாரும் நேசிக்கவில்லை என்ற ஏக்கத்திலும், தனிமையிலும் வாடுகிறார்கள். இது இளைஞர்கள் மற்றும் சிறு பிள்ளைகளிடையே மனநலப் பாதிப்புகளை உருவாக்குகிறது. தொழில்நுட்பக் கருவிகளே (கைபேசி, கணினி) அவர்களுக்குத் துணையாக மாறிவிடுகின்றன. 13 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளிடம் கூட தற்கொலை எண்ணங்கள் தோன்றுவது அதிர்ச்சியளிக்கிறது.
5. **புதிய திருமணப் போக்குகள்:** இளம் தம்பதியினர் திருமணத்திற்குப் பிறகு மிகக் குறைவான குழந்தைகளையே பெற்றுக் கொள்கின்றனர்; சிலர் குழந்தைகளே வேண்டாம் என்று முடிவு செய்கிறார்கள். குழந்தைகளுக்குப் பதிலாகச் செல்லப் பிராணிகளை (நாய், பூனை) வளர்க்க விரும்புகிறார்கள். மேலும், கத்தோலிக்கத் திருமணங்களில் "லாவெண்டர் கணவர்கள்" (Lavender husbands) என்ற புதிய கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. அதாவது, சமுதாயத்திற்கும் குடும்பத்திற்கும் பயந்து ஒரு ஆண் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறார், ஆனால் மனைவியோடு உடலுறவு கொள்வதில்லை. மாறாக, தனக்கு நெருக்கமான ஒரு ஆண் நண்பருடன் அதிக நேரத்தைச் செலவழித்து, அவருடன் நெருக்கமாக வாழ்கிறார். அதுமட்டுமின்றி, ஒன்றுக்கும் மேற்பட்ட தம்பதியினர் தங்களுக்குள் நெருக்கமான உறவைப் பகிர்ந்து கொள்ளும் "பாலியாமரஸ்" (Polyamorous - பலதுணைத் தொடர்பு) என்ற தவறான உறவுமுறையும் சில இளம் தம்பதிகளிடையே காணப்படுகிறது.
6. **முதியோர்களின் தனிமை:** மறைமாவட்டங்களில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும், அவர்கள் தனிமையில் வாடுவதும் மற்றொரு பெரும் கவலையாகும். வரும் 2030-ஆம் ஆண்டிற்குள், மலேசியா மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களில் 60%-க்கும் அதிகமானோர் 60 வயதைக் கடந்த முதியோர்களாக இருப்பார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. எனவே, நமது பங்குகளை முதியோர்களுக்கான சமூக மையங்களாக (Community Centers) மாற்ற வேண்டும் என்ற பரிந்துரை வழங்கப்பட்டது. ஏனெனில், ஆலயங்களுக்கு வருபவர்களில் பெரும்பாலோர் முதியோர்களே ஆவர்.

**தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள்:**

- **வலுவான மறைக்கல்வி (Catechesis):** புருணையைச் சேர்ந்த அருட்பணி பால் ஷி அவர்கள், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மிகச் சிறந்த மற்றும் ஆழமான மறைக்கல்வி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஏனெனில் இதுவே அவர்களின் விசுவாச வளர்ச்சிக்குரிய முக்கியப் பருவமாகும். இந்த மறைக்கல்வியில் பெற்றோர்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகளோடு சேர்ந்து பெற்றோர்களும் தனி அமர்வுகளில் பங்கெடுக்க வேண்டும்.
- **விசுவாச விழிப்புணர்வு:** விசுவாசத்தைப் பற்றிய அறியாமையே அனைத்துத் தீமைகளுக்கும் மூல காரணம். பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் வழங்கப்படும் மறைக்கல்வி அவர்களின் நற்போதனையையும் மனச்சான்றையும் (Conscience) வளர்க்க உதவும். பங்கிலுள்ள மறைக்கல்வித் துறையும், குடும்ப நலப் பணிக்குழுவும் இணைந்து செயல்பட வேண்டும். பெற்றோரின் பங்களிப்பு இல்லாமல் குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்படும் மறைக்கல்வி முழுமையான பலனைத் தராது.

அடுத்த ஆண்டு (2027) குடும்பம், பொதுநிலையினர் மற்றும் துறவர வாழ்வுக்கான பிராந்திய ஆணையத்தின் (ERCFLL) மாநாடு மே 10 முதல் 13 வரை புருணை நாட்டில் நடைபெறும்.

இறைப்பணியில், உதவிப் பணியாளர் (Deacon) டாக்டர் லெஸ்லி பெத்ரஸ்

## "அணுஆயுதங்களால் அல்ல, ஆயுதக் குறைப்பாலேயே அமைதி உருவாக்கப்படுகிறது!"




வத்திகான் பதிப்பகம், திருத்தந்தை பதினான்காம் லியோ எழுதிய "ஆயுதங்களற்ற அமைதி: சமாதானம் என்பது இறைவனின் கொடை" (Disarmed and Disarming: Peace Is a Gift) என்ற புதிய நூலை வெளியிட்டுள்ளது. அலெசாண்ட்ரோ பானஃபி அவர்களால் தொகுக்கப்பட்ட இந்நூல், மே 8, 2025 அன்று திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் அமைதியைப் பற்றி அவர் ஆற்றிய உரைகளையும் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து வழங்குகிறது. இத்தாலிய மொழியில் வெளியாகி, விரைவில் ஆங்கிலத்திலும் வரவிருக்கும் இந்நூல், திருத்தந்தை இதுவரை வெளியிடாத ஒரு புதிய தொடக்க உரையோடு தொடங்குகிறது.

**திருத்தந்தை பதினான்காம் லியோவின் உரை:**

"உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" – இதுவே உயிர்த்த இயேசு தனது திருத்தூதர்களுக்குக் கூறிய முதல் வாழ்த்துரை (யோவான் 20:19). உயிருடன் எழுந்த கிறிஸ்து, தனது நண்பர்களுக்கும் முழு உலகிற்கும் அளித்த முதல் கொடையும் இந்த அமைதியே ஆகும்.

ஆனால், அந்தக் கொடை எளிதாகப் பெற்றுத்தரப்பட்ட ஒன்று அல்ல; நாசரேத்தின் ஆசிரியரான இயேசுவின் மகிமை நிறைந்த உடலில் பாடுகளின் காயங்கள் வடுக்களாய் இருந்தன. அவர் வெறுப்பையும், வன்முறையையும், உலக மக்களின் "சிலுவையில் அறையும்" என்ற வெறிக்கூச்சலையும் எதிர்கொண்டார். வன்முறையற்றவராயும், வன்முறையைக் கைவிடச் செய்பவராயும் இயேசு கிறிஸ்து அநீதிகளைச் சகித்துக்கொண்டு, சாவுக்குப் பின் உயிர்த்தெழுந்தார். 2,000 ஆண்டுகளுக்கு முன்பு செயல்பட்ட அதே நற்செய்திப் பறைசாற்றல், இன்றைக்கும் நமது வரலாற்றில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

அமைதி என்பது பலரது உள்ளங்களிலும் பொங்கி எழும் மாபெரும் ஏக்கம். ஆனால், அது பல நேரங்களில் அச்சுறுத்தப்படுகிறது, மிதிக்கப்படுகிறது, எள்ளி நகையாடப்படுகிறது. இன்று உலகில் சுமார் 103 நாடுகள் ஏதோ ஒரு வகையில் போரில் ஈடுபட்டுள்ளன. உக்ரைன், மத்திய கிழக்கு, சூடான், மியான்மர், ஏமன், காங்கோ மற்றும் பல பகுதிகளில் ஆயுதங்கள் முழங்கி உயிர்களைப் பறிக்கின்றன.

எனக்கு முன் திருஅவையை அன்போடு வழிநடத்திய திருத்தந்தை பிரான்சிஸ், இரண்டாம் உலகப்போருக்குப் பின் எப்போதுமில்லாத இந்த பரவலான போர்ச் சூழலை, "துண்டு துண்டாக நடக்கும் மூன்றாம் உலகப்போர்" என்று விவரித்தார். இந்தத் தொகுப்பில் உள்ள எனது உரைகளை மீண்டும் வாசித்துப் பார்க்கும்போது, என் இதயத்திற்கு நெருக்கமான சில காரியங்களை உங்களுக்கு அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்:

1. **அமைதி என்பது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு**

   ஒரு சிக்கலையோ, பதற்றத்தையோ, அவமானத்தையோ எதிர்கொள்ளும்போது மற்றவர்களை மதிப்பிடுவதும், குற்றம் சாட்டுவதும், தண்டிப்பதுமே நமது முதல் தூண்டுதலாக இருந்தால், நம்மைச் சுற்றி முதலில் சுயநலப் போக்கும், பின்னர் வெறுப்பும் தானாக வளரும். கட்டியெழுப்பாமல் அழிக்கும் ஒரு தவறான பார்வை இது.

2. **அமைதி என்பது உண்மையின் மீது கட்டியெழுப்பப்படுகிறது**

   போர் செய்பவர்கள் கூட அமைதியின் "பெயரால்" தான் செயல்படுவதாகக் கூறிக்கொள்கிறார்கள். போருக்காகவே போர் செய்ய விரும்புவதாகச் சொல்லும் துணிச்சல் யாருக்கும் இல்லை. ஏனெனில், உலகை ஆளும் வல்லமையாளர்களும் கூட, ஒவ்வொரு மனிதனும் நீதியை விரும்புவதையும், அமைதியாக வாழ ஆசைப்படுவதையும் அறிவார்கள்.

   குறிப்பாக இந்த அணுஆயுத யுகத்தில், உண்மையை உரக்கச் சொல்ல வேண்டும்: அணுஆயுதங்கள் அமைதியைத் தருவதில்லை; மாறாக, ஆயுதக் குறைப்பே அமைதியை உருவாக்கும்.

3. **அமைதிக்கு சாட்சிகள் தேவை**

   பல மனிதர்களின் முகங்கள் வழியே அமைதியின் வலிமையை இந்த நூல் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அருளாளர் புளோரிபர்ட் பவானா சுய், இறை ஊழியர்களான ஜோர்ஜியோ லா பிரா மற்றும் டோரதி டே போன்ற நபர்கள் ஊழலை எதிர்த்து, ஏழைகளுக்கு உதவி, தூதரக பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளித்து அமைதியை முன்னெடுத்த முன்மாதிரிகள் ஆவர். இவர்களோடு சேர்த்து, தங்களின் மனசான்றின்படி வாழ்ந்த பல "அறியப்படாத அமைதித் தூதர்கள்" வழியேயும் அமைதி உலகில் உயிர்பெறுகிறது.

4. **அமைதிக்கு நம்பிக்கை தேவை**

   இயேசுவின் செய்தியை ஒரே ஊற்றாகக் கொண்டு, நம்பிக்கையோடு எதிர்காலத்தைப் பார்ப்போம். ஏனெனில், கிறிஸ்துவின் போதனையின் சாராம்சமே இதுதான்: அன்பு, இரக்கம் மற்றும் பிறருக்காகத் தன் உயிரைக் கொடுப்பது ஆகியவை மட்டுமே சாவு, தனிமை, வன்முறை ஆகியவற்றை வெல்லும்.

"ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு நான் வந்துள்ளேன்." (யோவான் 10:10)

உலகில் நடக்கும் பல போர்களைக் கண்டு நம்பிக்கையிழந்து சோர்ந்துபோகும் அபாயத்தில் இருப்பவர்களுக்கு, திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் முழுத் திருச்சபைக்கும் விடுத்த அழைப்பை நான் மீண்டும் விடுக்கிறேன்:

வன்முறையற்ற பாதையில் இறைவன் நம்மை வழிநடத்துவாராக! விசுவாசிகளும் நல்லெண்ணம் கொண்ட மக்களும் அமைதியை உருவாக்குபவர்களாக உழைப்பதை ஒருபோதும் நிறுத்தாதிருப்பார்கள் என மன்றாடுவோம்.

ஒவ்வொரு மனிதரும் அமைதியைத் தன் வாழ்நாளின் முக்கிய இலக்காக மாற்றுவாராக!

தமிழாக்கம் ஹெரால்டு

## பினாங்கு மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய திருத்தொண்டர்கள்







ஜூலை 14 அன்று பினாங்கு மறைமாவட்டம் (seminarians) குருத்துவ மாணவர்களான அருட்சகோதரர் ஆஷ்லி ஸ்டீபன் சாவ் மற்றும் அருட்சகோதரர் பேட்ரிக் ஹிலாரி சந்தனசாமி ஆகிய இருவருக்கும் திருத்தொண்டர் (Diaconate) திருநிலைப்பாடு நிறைவேற்றியது.

நகரப் பங்கின் (City Parish) விண்ணேற்பு அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற இந்த நன்றியறிதல் திருப்பலியில், அருட்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் இந்த புதிய திருத்தொண்டர்களின் குடும்பத்தினருடன் ஏராளமான இறைமக்களும் கலந்துகொண்டு மகிழ்ச்சியோடு இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

தங்களது குருத்துவப் படிப்பை நிறைவுசெய்து, கத்தோலிக்க குருத்துவத்தை நோக்கிப் பயணிக்கும் இந்த இருவருக்கும் இந்நிகழ்வு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. திருத்தொண்டர் பேட்ரிக், ஈப்போவில் உள்ள லூர்து அன்னை தேவாலயத்தைச் சேர்ந்தவர். சபாவைச் சேர்ந்த திருத்தொண்டர் ஆஷ்லி, பல ஆண்டுகளாக பினாங்கிலேயே பணியாற்றி, இந்நகரப் பங்கிற்குத் தொண்டாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பலியைத் தலைமைதாங்கி நடத்திய கார்டினல் செபாஸ்டியன் பிரான்சிஸ், தமது மறையுரையின் தொடக்கத்தில் இரு வேட்பாளர்களையும் நோக்கி உரையாற்றினார். இறைவனால் தங்களுக்கு அனுப்பப்படும் அனைத்து மக்களிடமும் இறைவார்த்தையைத் துணிவோடு பறைசாற்றுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து, திருத்தொண்டர் திருப்பணியின் முக்கியத்துவத்தை அவர் விவரித்தார்:

- வழிபாட்டுப் பணிகள்: நற்செய்தியைப் பறைசாற்றுதல், திருப்பலியில் குருவுக்கு உதவி செய்தல், திருவருட்சாதனங்களை (திருமுழுக்கு, திருமணம் போன்ற) நிறைவேற்றுதல்.
- அன்புப் பணிகள்: ஏழைகள், நோயாளிகள் மற்றும் ஆதரவற்றோருக்கு அர்ப்பணிப்புடன் அருட்பணிப் பணியாற்றுதல்.

நமது இறைவனாகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு "தொண்டனாய் வந்து ஊழியம் செய்தாரோ", அதேபோன்ற தாழ்ச்சியையும் சேவையையும் தங்களது ஊழியத்தில் கடைப்பிடிக்குமாறு கார்டினல் செபாஸ்டியன் அவர்களுக்கு நினைவூட்டினார். இதனைத் தொடர்ந்து திருநிலைப்பாட்டுச் சடங்குகள் நடைபெற்றன. புனிதர்களின் மன்றாட்டு மாலை, கைகளைச் சிரசின் மீது வைத்து செபித்தல், திருநிலைப்பாட்டு செபம், திருத்தொண்டர் ஆடை (Stole மற்றும் Dalmatic) அணிவித்தல், இறுதியாக நற்செய்திப் புத்தகத்தை ஒப்படைத்தல் ஆகிய சடங்குகள் பக்திப் பெருக்குடன் நிறைவேறின.

தங்களது குருத்துவ அழைப்பை வளர்த்தெடுக்க உதவியாக இருந்த, தங்களது வாழ்நாளில் உடன் பயணித்த அனைவருக்கும் புதிதாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இரு திருத்தொண்டர்களும் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (புனித யோவான் நற்செய்தி) என்ற இந்த விழாவின் கருப்பொருளைப் பற்றி இரு திருத்தொண்டர்களும் தியானித்து, ஆண்டவரைப் பின்பற்றி அவரது திருவுளத்தை நிறைவேற்றத் தங்களை முழுமையாக அர்ப்பணிப்பதாக உறுதி பூண்டனர்.

திருப்பலியின் நிறைவில், கார்டினல் செபாஸ்டியன் புதிய திருத்தொண்டர்களுக்கான பணிப்பொறுப்புகளை அறிவித்தார்:

- திருத்தொண்டர் ஆஷ்லி: புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னாள் பேராலயம் (Minor Basilica) மற்றும் பினாங்கு மறைமாவட்ட இளையோர் இயக்கம்.
- திருத்தொண்டர் பேட்ரிக்: நகரப் பங்கு (City Parish) மற்றும் பினாங்கு மறைமாவட்டத் திருஅவை தீர்பாய அலுவலகம் (Ecclesiastical Tribunal Office).

தமிழாக்கம் ஹெரால்டு

# பெஸ்தாரி ஜெயா, மின்ஞாக் தோட்ட சிற்றாலயத்தில் புனித அந்தோனியார் திருவிழா



பழமை வாய்ந்த மின்ஞாக் தோட்ட, புனித அந்தோனியார் சிற்றாலயத்தில், அந்தோனியார் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் அத்தோடு இங்கிருந்து புலம்பெய்ரந்த அந்தோனியார் பக்தர்கள் 21ஆம் தேதி ஜூன் மாதம் ஒன்று திரண்டனர். சுமார் முன்னூறு நம்பிக்கையாளர்கள் பங்கு பெற்றனர். முன்னதாக, ஜூன் 19ஆம் 20ஆம் தேதிகளில் வார்த்தை வழிபாடு நடைபெற்றது.

திருவிழா திருப்பலியன்று தமிழகத்திலிருந்து வருகை புரிந்த அருட்பணியாளர் குழந்தை இயேசு ராஜன் அவர்கள், தனது தாயாரப் பற்றி நினைவுக்கூறுகையில் புனித அந்தோனியார் எவ்வாறு இயேசுவிடம் பரிந்து பேசியுள்ளார் என்பதை சாட்சியாகப் பகிர்ந்து கொண்டார்.

சிறுவயது முதல் தாம் திக்குவாயனாக இருந்ததாகவும், தமது தாயார் தினந்தோறும் புனித அந்தோனியாரிடம் பக்தி கொண்டு மன்றாடியதாகவும் அதன் பின் தாம் படிப்படியாக நன்றாக பேசியதாகவும், இப்பொழுது அருட்பணியாளராக உங்கள் முன் இறை வார்த்தையை பகிர்ந்துக் கொண்டிருக்கிறேன் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அந்தோனியார் இறைவன்மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அது போல நாமும் இறைவனை பற்றிக்கொள்வோம் என வந்திருந்தோருக்கு அறிவுரைக் கூறினார். பெஸ்தாரி ஜெயா பங்குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ் கெப்ரியலும் உடன் கலந்து திருப்பலியை நிறைவேற்றினார்.

ஒவ்வொரு திருவிழாவின்போது மக்கள் குடும்ப நிகழ்வாக கலந்துகொண்டு பரஸ்பர உறவு, நட்பு, அன்பு, ஆகியவை மனதில் பதித்து ஆதிகால கிறிஸ்தவ வாழ்வை புதிப்பிக்கும் நிகழ்வாக அமைத்துக் காட்டினர். இந்நிகழ்வு கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகறுகிறது என்றால் மிகையாகாது.

ஆவி.டேவிட்.

# பொதுக்காலம் 18ஆம் வாரம் – ஞாயிறு

**எசாயா 55:1-3; உரோ. 8:35, 37-39; மத்தேயு 14:13-21**

## இறைவனின் இரக்கமும் அன்பும் குறைவுகளை நிறைவாக்கும்

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 18-ஆம் ஞாயிறுவில் நான் இணைகிறோம். இன்று குறிப்பாக, நம்பிக்கையோடு வந்தவர்களை இறைவன் வெறுங்கையுடன் அனுப்புவதில்லை என்ற கருப்பொருளில் தியானிக்கவும் சிந்திக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

முதல் வாசகத்தில் இறைவன் தாகமுள்ள அனைவரையும் தம்மிடம் வருமாறு அழைக்கிறார். பணமின்றியும் அவரது அருளையும் வாழ்வளிக்கும் ஆசீர்வாதங்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுமாறு அழைக்கிறார். அவருடைய வார்த்தைக்குச் செவிசாய்ப்பவர்கள் உண்மையான வாழ்வையும் நிலையான உடன்படிக்கையின் அருளையும் பெறுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் வாசகத்தில், எந்தத் துன்பமோ, சோதனையோ, ஆபத்தோ நம்மை கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிக்க முடியாது. கிறிஸ்துவின் அன்பினால் நாம் அனைத்திலும் வெற்றியாளர்களாக இருக்கிறோம் என்று பவுல் அடிகள் எடுத்துரைக்கிறார்.

அடுத்து வரும் நற்செய்தியில்,இயேசு தனிமையை நாடிச் சென்றபோதும், அவரைத் தேடி வந்த பெருந்திரளான மக்கள்மேல் இரக்கம்கொண்டு அவர்களுடைய நோய்களைக் குணமாக்கினார். மாலை நேரத்தில், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து சீடர்களின் வழியாக மக்களுக்கு வழங்கினார். அனைவரும் வயிறார உண்டனர்; மீதமிருந்த துண்டுகள் பன்னிரண்டு கூடைகள் நிறைந்தன. சுமார் ஐயாயிரம் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட, இந்த அற்புத உணவால் திருப்தியடைந்தனர். இந்நிகழ்வு, இயேசுவின் இரக்கம், இறைவனின் அளவற்ற பராமரிப்பு, மற்றும் அவர் வழங்கும் ஆசீர்வாதத்தின் நிறைவை வெளிப்படுத்துகிறது.

இன்றைய மூன்று இறைவார்த்தைப் பகுதிகளும் ஒரே உண்மையை நமக்கு எடுத்துரைக்கின்றன: இறைவன் நம்மை அன்போடும் பரிவோடும் பராமரிக்கிறார் என்பதாகும். நாம் வைத்திருப்பது சிறியதாக இருந்தாலும், அதை ஆண்டவரிடம் ஒப்படைத்தால், அவர் அதை பலருக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார் என்று இன்று வலியுறுத்திக் கூறப்படுகிறது.

இன்றைய நற்செய்தியில், கலிலேயா கடற்கரைக்கு அருகில் வாழ்ந்த யூத மக்களுக்காக இயேசு நிகழ்த்திய முதல் அப்பப் பெருக்க அற்புதம் சித்தரிக்கப்படுகிறது. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளைத் தவிர்த்து சுமார் ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தார். அனைவரும் வயிறார உண்டபின், பன்னிரண்டு கூடைகள் நிறைய உணவு மீதமிருந்தது.

இயேசுவின் தெய்வீகத்தன்மை அவருடைய மனிதத்தன்மையை மறைக்கவோ அல்லது குறைக்கவோ இல்லை. மாறாக, தெய்வீக அன்போடு அவர் யோவானின் மரணத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறார்; அதேவேளையில், உண்மையான மனித இதயத்தோடு அவர் துக்கத்தையும் முறையாக அனுசரிக்கிறார். இயேசுவில் தெய்வீகத்தன்மையும் மனிதத்தன்மையும் ஒன்றிணைந்துள்ளன என்பதை அறிகிறோம்.

இந்த இரக்கம் இறை அன்பில் தோன்றியது என்றாலும் இயேசுவின் தூய மனிதத்தன்மையின் வழியாகவே வெளிப்படுகிறது. அவரது இரக்கமிக்க பார்வை, இறைவனின் பரிவிரக்கத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இயேசு வெறுமனே பரிதாபப்படுபவர் அல்ல; மாறாக, உறுதியுடன் செயல்பட்டு நோயாளிகளை குணமாக்கி, அவர்களின் துன்பங்களை நீக்குகிறார்.

அப்பங்களும் மீன்களும் பெருகிய நிகழ்வு, நற்கருணையின் முன்னறிவிப்பாகவும் அமைகிறது. இதுவே இந்த நிகழ்வு நான்கு நற்செய்தி நூல்களிலும் பதிவு செய்யப்பட்டதற்கான முக்கிய காரணமாக இருக்கலாம். நற்கருணையில், இறைவன் நமது ஆன்மீகப் பசியைத் தீர்ப்பதற்காக, அளவற்ற நிறைவோடு தம்மையே நமக்கு உணவாக வழங்கிக்கொண்டிருக்கிறார். முதல் வாசகத்தில் இறைவன் தாகமுள்ள அனைவரையும் தம்மிடம் வருமாறு அழைத்ததைப்போல் நற்கருணை வழியாகவும் நம்மை தாகம் தீர்க்க அழைக்கிறார் என்பதை நினைவில்கொள்வோம், அவரது தயவை என்றும் நாடி நிற்போம்.

ஆர்.கே. சாமி, சிரம்பான்

# புனித லூர்து மாதா தேவாலய மறைப்பணி தியானம்



ஈப்போ, புனித லூர்து மாதா தேவாலயத்தின் ஆண்டு நிகழ்வான பங்கு மறைப்பணி தியானம் கடந்த ஜூன் மாதம் முழுமையும் மிக சிறப்பாக நடந்தேறியது. பங்கு தந்தை அருட்பணி ரோபர்ட் டேனியல், துணை தந்தை ஜோர்ஜ் அவர்களின் ஏற்பாட்டில் இந்தியா, பெங்களூர் மற்றும் கோயம்புத்தூர் இரட்சகர் சபையைச் சார்ந்த இரு அருட்பணியாளர்களான அருட்பணி கிறிஸ்தோபர், அருட்பணி ஜோன்சன் ஆகியோர் மக்களோடு பயணித்தனர்.

இந்த மறைப்பணி தியானம் ஒவ்வொரு நாளும் திருப்பலியோடு ஆரம்பமாகியது. ஒவ்வொரு நாளும் ஒரு மையக்கருத்தோடு விளக்கவுரை ஆற்றப்பட்டது. விசுவாசத்தின் மேன்மை, திருவருட்சாதனங்களின் முக்கியத்துவம், அன்றாட குடும்ப செபம் என முக்கிய கூறுகள் பங்கு மக்களுக்கு எளிய முறையில் எடுத்துரைத்தார்கள். அருங்கொடை செபம், துதி ஆராதனைப் பாடல்களும் உடன் சேர்க்கப்பட்டன.

நமது நம்பிக்கை என்றும் ஒரு பயணமாக இருக்க வேண்டும். அது தேங்கி நிற்கக் கூடாது. ஞாயிறு திருப்பலியோடு நின்றிடாமல் ஆன்மீக ரீதியில் வளர்ச்சி அடைதல் அவசியம். அன்றாடம் இறைவார்த்தையை வாசித்து தியானிக்க வேண்டும். இறைவார்த்தையை முழுமையாக ஏற்பதே நமது விசுவாசம். மேலும் நமது கண்ணுக்கு புலப்படாதவற்றை நம்புவது அதாவது ஊனகண்ணுக்கு தெரியாத மறைவுண்மையை நம்புவதே நமது விசுவாசம். நாம் கொண்டாடும் திருப்பலி கல்வாரி பலியை நினைவுக்கூறுகின்றது. இப்படியாக நாம் நன்றியுணர்வோடு திருப்பலியில் பங்கேற்போமாயின் அவரோடு உள்ள உறவில் வளர்ச்சியடைகின்றோம் என உணரலாம். எனவே ஆலயம் வருவதன் மூலம் உறவு பறிமாற்றம் ஆகிறது.

சமாரிய பெண் போல தேடுதல், ஆர்வத்தோடுச் செயல்படுதல், யோபு போல சோதனைகளில் விசுவாசத்தில் உறுதியாய் இருத்தல், பார்வையற்ற இளைஞர் சான்று பகர்வதுப் போல் சான்று பகர வேண்டும். "என் விருப்பமல்ல உம் விருப்பம் ஆகுக" என முழுமையாக சரண்னடைதல் போன்றவைகள் விசுவாச முயற்சிகளாகும். முதிர்ச்சியான விசுவாச வாழ்வு எப்படி இருக்குமாயின் நற்கருணை மீது ஆழ்ந்த பற்று, திருப்பலிக்கு வர வேண்டும் என்ற தீராத தாகம், தாழ்ச்சி மனப்பான்மை மேலோங்கும், மன்னிக்கும் தாராள உள்ளம் உருவாகும், மற்றும் பிறரன்பு, இரக்கம் எனும் வாழ்வில் செயலாற்றும் பண்புகள் உருவாகும்.

மேலும், நமது கிறிஸ்துவ வாழ்வின் நம்பிக்கையின் நான்கு முக்கிய தூண்களாக கருதுவது விசுவாச அறிக்கை, திருவருட்சாதனங்கள், நன்னெறி வாழ்க்கை, செபம் . இதில் ஏதாவது ஒன்று விடுப்பட்டாலும் நமது கத்தோலிக்க வாழ்வானது நிலையானதாக இருக்காது என விவரித்தார்.

தொடர்ந்து அருட்பணியாளர் திருவருட்சாதனங்களைப் ஒவ்வொன்று பற்றியும் மிகத் தெளிவாக விளக்கம் அளித்தார். அருட்சாதனங்கள் எல்லாம் கிறிஸ்துவ வாழ்வில் வெளிப்புற அடையாளமாகவும் உட்புற அருளாகவும் உணரப்படுகின்றது. கத்தோலிக்க கிறிஸ்துவ வாழ்வின் ஒவ்வொரு பகுதிலும் நாம் காலடி எடுத்து வைக்கும் போதும் அருட்சாதனமே நுழைவாயிலாக தொடங்கி வைக்கிறது.

இந்த ஒவ்வொரு நாள் மறைப்பணி தியானத்திலும் பங்கு மக்கள் மிக ஆர்வத்தோடும், பக்தி முயற்சியோடும் பங்கேற்றனர். இறுதி வாரத்தில் ஒவ்வொரு நாளும் செபமாலையும், நற்கருணை ஆராதனையும் ஆசீரும் வழங்கப்பட்டது. குழந்தைகள், தந்தைமார்கள், தாய்மார்கள், இளைஞர்கள், தம்பதியர்கள் ஆகியோர்களுக்கு ஆசீரும், நோயாளர்களுக்கு நோயில் பூசுதலும் அருளப்பட்டன. இந்த மறைப்பணி தியானம் மெய்யாகவே ஆன்ம வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது.

அன்புடன் குளோரியா மெத்யூஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015